## நாளை (செப்.6) நடைபெறுகிறது!

# திருச்சி மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அறிவிப்பு!

திருச்சி, செப். 5 -

தி.மு.கழக முதன்மை செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவருமான கே.என்.நேரு அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

நாளை ( 06.09.2026 - ஞாயிற்றுக் கிழமை) காலை 10.00 மணி அளவில் மாவட்ட செயற்குழுக் கூட்டம் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவைத்தலைவர்கள் பேரூர் தர்மலிங்கம், எஸ்.ஏ.அம்பிகாபதி, கோவிந்தராஜ் ஆகியோர் தலைமையில் முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, க.வைரமணி, ந.தியாகராசன், முன்னாள் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நடைபெற இருக்கிறது.



இக்கூட்டத்தில் தலைமைக் கழகத்தின் சார்பாக வேலுசாமி, முன்னாள் எம்.எல்.ஏ., வேடசந்தூர் சாமிநாதன், எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கிறார்கள்.

இக்கூட்டத்தில் திருச்சி கிழக்கு, மத்திய, வடக்கு மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் மற்றும் செயல்வீரர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு இக்கூட்டத்தினைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்:

கழக மறுசீரமைப்பு பணி.

இவ்வாறு கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## ரிஷிவந்தியம் தொகுதி,

# வாணாபுரத்தில் தாலுகா மருத்துவமனை அமைக்க வேண்டும்!

### சட்டப்பேரவையில் வசந்தம் க.கார்த்திகேயன் வலியுறுத்தல்!

ரிஷிவந்தியம், செப்.4:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட வாணாபுரத்தில் 30 படுக்கைகள் கொண்ட தாலுகா மருத்துவமனை அமைக்க வேண்டும் என்று சட்டப்பேரவையில் வசந்தம் க. கார்த்திகேயன் பேசினார்.

தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத் தொடரின் கேள்வி நேரத்தின் போது பேசிய ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் எனது தொகுதிக்கு உட்பட்ட வாணாபுரம் பகுதி தனி வட்டமாக தரம் உயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது. ஆனால் இங்கு தற்போது ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுமே செயல்பட்டு வருகிறது. வாணாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தினமும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து 500க்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சைக்காக வருகின்றனர். இருப்பினும் இங்கு நோயாளிகளை அனுமதித்து சிகிச்சை அளிக்க 5 படுக்கைகளும், மகப்பேறு சிகிச்சைக்காக 10 படுக்கைகளும் மட்டுமே உள்ளன.



மாலை மற்றும் இரவு நேரங்களில் ஏற்படும் விபத்து காயங்கள், அவசர சிகிச்சைகள் மற்றும் இரவு நேர பிரசவங்களுக்கு வரும் கர்ப்பிணிகளுக்கு முறையான தீவிர சிகிச்சை அளிக்க முடிவதில்லை. முதலுதவி மட்டுமே செய்யப்பட்டு, சங்கராபுரம் அல்லது கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்படும் அவலநிலை உள்ளது.

இதனால் பொது மக்கள் வேறு வழியின்றி தனியார் மருத்துவமனைகளை நாடும் சூழல் ஏற்படுகிறது.

எனவே வாணாபுரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப்புற மக்களின் நலனை கருத்தில் கொண்டு. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை ய30 படுக்கை வசதிகள் கொண்ட தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும். மேலும் அங்கு காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை நிரப்புவதோடு, இயன்முறை மருத்துவம், ரத்த வங்கி, சித்த மருத்துவ பிரிவு போன்ற கூடுதல் வசதிகளையும் உடனடியாக ஏற்படுத்தித்தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி பேசினார்.

## ஆம்பூர் மருத்துவமனையில்

# மகப்பேறு சிகிச்சை மையம் அமைத்துத்தர வேண்டும்!

### சட்டப்பேரவையில் ஆம்பூர் அ.செ. வில்வநாதன் கோரிக்கை!

சென்னை, செப். 5 -

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது ஆம்பூர் தொகுதி கழக உறுப்பினர் அ.செ. வில்வநாதன் ஆம்பூர் மருத்துவமனையில் மகப்பேறு சிகிச்சை மையம் தொடங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து பேரவையில் நடந்த விவாதம் வருமாறு:

**அ.செ.வில்வநாதன்:** ஆம்பூர் அரசு மருத்துவமனை ஒரு தாலுகா மருத்துவமனையாகும். ஒரு நாளைக்கு 2,000 முதல் 2,200 வரை புறமருத்துவப் பயனாளர்கள் மற்றும் 160 முதல் 170 வரை உள்மருத்துவப் பயனாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த ஆட்சியில் இங்கு சிறுபான்மை நலத் துறைமூலம் தரைத்தளம் மற்றும் 6 அடுக்குகள் கொண்ட கட்டடம் கட்டப்பட்டு, அதில் 144 படுக்கை அறைகளுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மீதம் 114 படுக்கை அறைகள் 1978 ஆம் ஆண்டு கட்டப்பட்ட பழுதடைந்த பழைய கட்டடத்தில் இயங்கி வருகின்றன. ஆம்பூர் மருத்துவமனையில் இதுவரையில் மகப்பேறு சிகிச்சை மற்றும் பச்சிளம் குழந்தை சிகிச்சை மையம் இல்லை.

மகப்பேறு சிகிச்சை மற்றும் பச்சிளம் குழந்தை சிகிச்சைக்காக வேலூர் மாவட்டத்திலுள்ள அடுக்கம்பாறைக்குச் செல்ல வேண்டிய நிலையில் பொதுமக்கள் உள்ளனர்.

எனவே, சுற்றுவட்டாரப் பிரிவைச் சார்ந்த பொது மக்களுக்கு உதவும் வகையில் CEmONC பிரிவை ஏற்படுத்தி, மகப்பேறு சிகிச்சை மற்றும் பச்சிளம் குழந்தை சிகிச்சைக்குரிய மருத்துவர்களை அமைத்து, அதற்குரிய கட்டடத்தைத் தருமாறு தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



**அமைச்சர் டாக்டர் கோ.க. அருண்ராஜ்:** ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், ஆம்பூர் தாலுகா மருத்துவமனையில் CEmONC centre-மகப்பேறு சிகிச்சை மையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்.

அந்த மருத்துவமனையில் மாதம் எத்தனை பிரசவங்கள் நடக்கின்றன என்பதை நாம் ஆய்வில் மேற்கொண்டு, தேவைப்பட்டால் கண்டிப்பாக நிச்சயம் அதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அ.செ.வில்வநாதன்:** ஆம்பூர் சட்டமன்றத் தொகுதியில் கங்காபுரம் பகுதியில் 50 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டுக்கொண்டு இருந்தது. அது பல ஆண்டுகளாகச் செயல்படாமல் நிறுத்தப்பட்டது.

கடந்த நிதியாண்டில் நான் இதுகுறித்து கேள்வி எழுப்பியபோது, நிதிநிலை அறிக்கையில் 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படும் என்று தெரிவித்தார்கள். அதைச் செயல்படுத்தித் தருமாறு பால் மற்றும் பால்வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## புதிய 4 முழ வேட்டியை

# தற்போதைய தறியில் தயார் செய்ய முடியாது!

### சட்டப்பேரவையில் எஸ்.ஆஸ்டின் பேச்சு!

சென்னை, செப். 5 -

சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் எஸ். ஆஸ்டின் பேசுகையில் புதிய 4 முழ வேட்டியை தயார் செய்ய தற்போதைய தறியில் செய்ய முடியாது என்று பேசினார்.

சட்டப்பேரவையில் எஸ்.ஆஸ்டின் பேசியதாவது:



அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே குறிப்பிடும்போது தெளிவாகச் சொன்னார்கள். கைத்தறிகள் நிற்காமல் ஓடுவதற்கு நான் உத்தரவாதம் கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். அதை நடைமுறைப்படுத்தினால், உண்மையிலேயே நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். அதில் ஒரே ஒரு கேள்வி இருக்கிறது. புதிய 4 முழ வேட்டி ரகத்தை நீங்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள். அதை உறுதியாக இந்த ஆண்டிலே நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதிலே உறுதியாக இருப்பதாக சொல்லிவிட்டீர்கள்.

அந்த வேஷ்டியை இப்போது ஓடிக் கொண்டிருக்கின்ற தறியில் தயார் செய்ய வேண்டுமென்று சொன்னால், தற்போதைய நிலையிலே அது முடியாது. எனவே, அதற்கான உற்பத்தி ஆணையை நீங்கள் கொடுப்பதற்கு முன்பாகவே அந்த தறியிலே மாற்றம் செய்வதற்கு 10 ஆயிரம் ரூபாய் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்தால் தான் மாற்றம் செய்ய முடியும். அதை நெசவாளர்களால் செய்ய முடியாது.

அதற்கான மானியத்தை நெசவாளர்களுக்குக் கொடுத்து, உற்பத்தி ஆணையும் நீங்கள் கொடுப்பீர்கள் என்று சொன்னால், நிச்சயமாக நீங்கள் சொன்ன உத்தரவாதத்தை நிறைவேற்ற முடியும்.

அதைச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

இவ்வாறு எஸ்.அஸ்டின் பேசினார்.

## 100 சதவிகிதம் இ.வி.எம். மெஷின்களை சரிபார்க்க உச்சநீதிமன்றம் அனுமதி!

# 1950 இல் இட ஒதுக்கீட்டு வழக்கில் போராடி வென்றதைப் போல EVM வழக்கிலும் வெல்வோம்!

### கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ பேட்டி!

சென்னை, செப். 5 -

EVM மெஷின் குளறுபடி தொடர்பான உச்சநீதிமன்ற வழக்கு பற்றி கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ அவர்கள் பேட்டியளித்தார். மேலும் அவர் தமது பேட்டியில் 100% EVM மெஷின்களை சரி பார்க்க உச்சநீதிமன்றம் அனுமதி என்றும், 1950 இல் இட ஒதுக்கீட்டு வழக்கில் போராடி வென்றதைப் போல EVM வழக்கிலும் வெல்வோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ அளித்த பேட்டி வருமாறு:-

கொளத்தூர் தொகுதிக்கு உட்பட்ட EVM கள் பழுதுபட்டுள்ளது தொடர்பாக ஏற்கனவே ஆதரங்களுடன் உச்ச நீதிமன்றத்தில் எடுத்து வைத்தோம். தேர்தல் ஆணையம் மொத்தம் 19 EVM களை சரிபார்த்துவிட்டு 14 EVM கள் சரியாக இயங்குகின்றன என்று மட்டும் ஒரு அறிக்கையை கொடுத்துள்ளார்கள். இது தவறு 14 மெஷின்களில் ஐந்து மெஷின்கள் சரியாக இல்லை என்றால் ஏறக்குறைய 32.33% EVM கள் பழுதடைந்திருக்கிறது என்பதை நாங்கள் ஆதாரப்பூர்வமாக நிரூபித்திருக்கிறோம்.

எனவே கொளத்தூர் தொகுதியினுடைய 100% EVM களையும் சரி பார்க்க வேண்டும். அந்த VV பேட்டில் இருக்கக்கூடிய வாக்கு சீட்டுகளை எண்ணி பார்க்க வேண்டும் என்று ஒரு ரிட் மனுவை தாக்கல் செய்தோம். இதனுடைய விளைவாக கான்சிகவன்சியல் பிரேயராக எங்களது தலைவர் வெற்றி பெற்றதாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டிருந்தோம். ஆக இரண்டு பிரேயர்கள் செய்யப்பட்டிருந்தன. EVM தொடர்பாக அதிக குற்றச்சாட்டுகள் எழுந்ததால் இந்த வழக்கை தொடுக்க வேண்டும் என கழக சட்டத்துறைதான் முன்னெடுத்தது. கழக தலைவரிடம் எடுத்துச் சொல்லி அவருடைய ஒப்புதலை பெற்று நாங்கள் அந்த மெஷின்களை சரி பார்த்தோம். அதில் ஐந்து மெஷின்கள் குறைபாடு உடையவதாக இருக்கவே உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம்.

ரெப்ரசென்டேஷன் ஆப் பீப்பிள் ஆக்ட்ல செக்ஷன் 100 படி இன்னென்ன காரணங்களுக்காகத்தான் தேர்தலை தள்ளுப்படி செய்ய வேண்டும் என்று ஒரு பிரிவு இருக்கிறது. அதில் EVM கள் சரியாக இல்லை என்றால் பழுதடைந்திருந்தால் தேர்தலை தள்ளுபடி செய்யலாம் என்ற காரணம் அதில் சொல்லப்படவில்லை. ஏனென்றால் அது 1951ல் இயற்றப்பட்ட சட்டம். EVM கள் அறிமுகப்படுத்திய போது கூட அதற்கு ஏற்றவர் போல் ரெப்ரசென்டேஷன் ஆப் பீப்பிள் ஆக்டை அமென்ட் செய்யப்படவில்லை.

**தேர்தல் வழக்கை மனுவாகத்தான் தாக்கல் செய்ய முடியும்!**

இரண்டாவதாக அரசியல் அமைப்பு சட்டத்தில் எல்லா தேர்தல் வழக்குகளையும் தேர்தல் குறித்த வழக்குகளையும் தேர்தல் மனுவாகத்தான் தாக்கல் செய்ய முடியும் என்று சொல்லி சொல்லியிருக்கிறது. தேர்தல் மனுவை 45 நாட்களுக்குள்ளாக தாக்கல் செய்ய வேண்டும். கொளத்தூர் தொகுதியை பொறுத்தவரைக்கும் நாங்கள் தேர்தல் முடிவு வந்த மூன்றாவது தினமே 7.5.2026 லேயே அதற்குரிய பணத்தைக்கட்டி தேர்தல் ஆணையத்தில் எங்களுக்கு இந்த 14 இயந்திரங்களை EVM களை சரிபார்க்க வேண்டும் என கேட்டிருந்தோம். ஆனால் தேர்தல் ஆணையம் 45 நாட்களுக்கு பிறகு தான் சொல்லப்போனால் மூன்று மாதங்களுக்கு பிறகுதான் அந்த இயந்திரங்களை எடுத்து பரிசோதனை செய்தார்கள். எனவே தேர்தல் மனுவை ஒரு எதிர்பார்க்கும் நோக்கில் தாக்கல் செய்ய முடியாது. இந்த டெக்னிக்கல் ஆஸ்பெக்ட்ல இன்றைக்கு உயர்நீதிமன்றம், கொளத்தூர் தொகுதியில் கழக தலைவர் அவர்கள் வெற்றி பெற்றதாக அறிவிக்க வேண்டும் என்பது தேர்தல் மனுவாகத்தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளது. எனவே அது நிலைக்க தக்கதுஅல்ல.

இருப்பினும் கூட 100% EVM மெஷின்களை சரிபார்ப்பது குறித்து உரிய மனுவை உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்து கொள்ளக்கூடிய அனுமதியை வழங்கி இன்றைக்கு தீர்ப்பளித்திருக்கி றார்கள். எனவே இது குறித்து நாங்கள் கழக தலைவரிடம் தலைமைக் கழகத்திடம் எடுத்துச் சொல்லி இதை உச்சநீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ள நாங்கள் கேட்போம் தலைமைக் கழகத்தினுடைய அறிவுறுத்தல் படி நாங்கள் செயல்படுவோம்.

**கொளத்தூர் தொகுதியில் முதலில் எழுந்த சட்டச் சிக்கல்!**

முதல்ல இந்த நிலைப்பாடு EVM கள் பழுதாகி இருந்தால் என்ன நிலைமை என்பதை இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் கொளத்தூர் தொகுதியில் தான் இந்த சட்ட சிக்கல் எழுப்பப்பட்டிருக்கிறது. எப்படி இட ஒதுக்கீட்டை 1950 களிலே உயர்நீதிமன்றமும் உச்ச நீதிமன்றமும் செல்லாது என்று சொன்ன போது ஒரு தொடர்ச்சியான போராட்டத்தின் வழியாக அரசியலமைப்பு சட்டம் மாறியதோ அதை போலத்தான் EVM கள் பழுதடைந்தது தெரிந்தால் அந்த தேர்தல் செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என்ற ஒரு சட்டம் வரும் அது உச்ச நீதிமன்றமோ அல்லது உயர் நீதிமன்றமோ வரும் காலங்களில் அதுபோன்ற ஒரு தீர்ப்பை சொல்லுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

இதற்கு பிறகு இந்த ஐந்து மெஷின்களில் எப்படி குறைபாடுகள் இருக்கிறது உட்பட 18 கேள்விகளை எழுப்பி நாங்கள் தேர்தல் ஆணயத்திற்கு ஐந்தாம் தேதியே கடிதம் கொடுத்திருக்கிறோம் அதற்கும் இன்னும் பதில் வரவில்லை. எலக்ஷன் கமிஷனுடைய ஹேண்ட் புக்ல கொஞ்சம் டெக்னிக்கலா சொல்லணும்னா ஒரு கம்ப்யூட்டர் 100% சரியாக இயங்குகிறது என்றால் சிமா லெவல் அதுலதான் 100% சரியா இயங்குகிறது என்று சொல்வார்கள்.

ஆனால் எலக்ஷன் கமிஷனே தன்னுடைய வெப்சைட்ல இந்த ஈவிஎம் மெஷின்கள் 4 சிக்மா லெவல்ல தான் அதனுடைய நம்பகத்தன்மை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அதாவது ஒரு லட்சம் ஓட்டு போட்டா அதுல ஏறக்குறைய 1600 வாக்குகள் வந்து சரியாக பதிவிடாமபோகலாம் என்ற ஒரு நிலைதான் எலக்சன் கமிஷனே தன்னுடைய வெப்சைட்ல சொல்லி இருக்கறாங்க. இதையெல்லாம் நாங்கள் தேவையென்றால் உயர்நீதிமன்றம் கொடுத்த அனுமதியை போல உயர்நீதிமன்றத்திலேயோ அல்லது கழக தலைமை கழக தலைவர் எப்படி சொல்கிறாரோ அப்படி உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கை தொடர்ந்து எடுத்து செல்வோம்.

இவ்வாறு மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ கூறியுள்ளார்.

## முன்னாள் எம்.பி. சா.ஞானதிரவியம், வ.து.ந. ஆனந்த் பங்கேற்பு!

# தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் !

### மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தென்காசி.செப்.5 -

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் (06.09.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணி அளவில் சங்கரன்கோவில் ஏ.வி.ஆர்.எம்.வி. திருமண மஹாலில் சங்கரன்கோவில் மற்றும் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. செயற்குழுக் கூட்டம் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் தலைமைக் கழக பிரதிநிதிகள் முன்னாள் எம்.பி. சா.ஞானதிரவியம், வ.து.ந.ஆனந்த் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.



என தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாளை (6 ம் தேதி ஞாயிறு) அன்று மாலை 4 மணி அளவில் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள ஏ.வி.ஆர்.எம்.வி திருமண மஹாலில் எனது தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தலைமைக் கழக பிரதிநிதிகள் சா.ஞானதிரவியம் (முன்னாள் எம்பி) வ.து.ந.ஆனந்த் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

எனவே தென்காசி வடக்கு மாவட்டக் கழகத்திற்கு உட்பட்ட சங்கரன்கோவில் மற்றும் வாசுதேவ நல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஈ.ராஜா எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

## தலைமைக் கழக பிரதிநிதிகள் முன்னாள் எம்.பி. சா.ஞானதிரவியம் - வ.து.ந.ஆனந்த் பங்கேற்பு!

# தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிவிப்பு!

தென்காசி.செப்.5 -

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (05.09.2026 சனிக்கிழமை) மாலை 4 மணி அளவில் தென்காசி சிவா திருமண மண்டபத்தில் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் (எனது) தலைமையில் நடைபெறுகிறது என அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவரது அறிக்கை வருமாறு.

கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தென்காசி மற்றும் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட செயற்குழுக் கூட்டம் நாளை (05.09.2026 சனிக்கிழமை) மாலை 4 மணியளவில்,தென்காசி சிவா திருமண மண்டபத்தில் எனது தலைமையில் நடைபெறுகிறது.



இக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பிரதிநிதிகளான சா.ஞானதிரவியம் (முன்னாள் எம்.பி.) மற்றும் வ.து.ந. ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

கூட்டத்தில் தென்காசி மற்றும் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணி அமைப்பாளர்கள், சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு கழகப் பணிகள் மற்றும் எதிர்கால செயல்பாடுகள் குறித்து தங்களது கருத்துகளை வழங்க உள்ளனர்.

மேலும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாவட்டத்தில் கழகப் பணிகளை மேலும் வலுப்படுத்துவது,அமைப்பு ரீதியான பணிகளை தீவிரப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்பட உள்ளன.

எனவே தென்காசி மற்றும் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.